O.S.83-2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.83/2018

வாதி தரப்பு 1வது சாட்சி மனிஷா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனிஷா | வயது | : | 22/24 |
| தகப்பனார் பெயர் | : | செந்தில்குமார் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | குளத்தூர்நாயக்கர்பட்டி | தொழில் | : | தனியார் நிறுவனத்தில் வேலை |

நாள்-25.09.2024

வா.சா.1

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1, 2, 3 மற்றும் 4 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் எங்கு உள்ளது, யாரிடம் உள்ளது என்றால் 2வது ஆவணத்தில் உள்ள சொத்து வீட்டிற்கானது. வா.சா.ஆ.1 ஆவணம் வீட்டு மனை சம்மந்தமானது.

2) ராதாகிருஷ்ணன் என்பவரிடம் என் தாத்தா முத்துசாமி ஒரு இடத்தை கொடுத்துவிட்டு, அதற்காக வேறு ஒரு இடத்தை வாங்கிக்கொண்டார். என் அம்மா பெயரில் மின் ரசீது உள்ள இடத்தைதான் என் தாத்தா முத்துச்சாமி, ராதாகிருஷ்ணனிடமிருந்து வாங்கினார்.

3) என் அம்மா பெயரில் மின் ரசீது உள்ள இடம் என் அம்மா விலைக்கு வாங்கியது என்று முதல் விசாரணையில் சொல்லியிருந்தால், அவ்வாறு சொல்லியிருப்பது தவறு.

4) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் என் அப்பாவின் அப்பா, எனது தாத்தா பெயரில் உள்ள சொத்துக்களை 'அ' பதிவேடு போட்டு பரிசோதித்தில் கிடைத்த ஆவணம். மேற்படி ஆவணம் எந்த அட்டவணைக்குரிய தாவாசொத்து ஆவணம் என்று தெரியவில்லை.

5) உயிலை பற்றி 2016ல் எனக்கு தெரிய வந்தது.

6) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 உயில் ஆவணம் எனது அப்பா மனு போட்டு வாங்கிய ஆவணம். மேற்படி ஆவணம் பழைய வீடு சுத்தம் செய்யும்போது எங்களுக்கு கிடைத்த ஆவணம். இன்னும் நிறைய ஆவணங்கள் கிடைத்தது. பட்டா கிடைத்தது. அது என்ன ஆவணம், யார் பெயரில் உள்ளது என்று தெரியாததால் நாங்கள் அதை தாக்கல் செய்யவில்லை.

7) எனது தாத்தா 2003ல் எழுதி வைத்த உயில் அப்போதே தெரியும் என்றாலும், இந்த வழக்கிற்காக 2016ல் தான் தெரியும் என்றுசொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) என் அப்பா மனு போட்டு வாங்கி வைத்த வா.சா.ஆ.8 உயில் ஆவணத்தை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) வா.சா.ஆ.15, 16 ஆவணங்களான மூர்த்தியின் இறப்புச்சான்று, வாரிசச்சான்றும் எவ்வாறு கிடைத்தது என்றால் அவைகள் எங்கள் வீட்டில் இருந்த ஆவணங்கள். 2015ம்

ஆண்டு மூர்த்தி இறந்தவுடன் என் அப்பாதான் 1ம் பிரதிவாதியிடம் மேற்படி ஆவணங்களை வாங்கி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

10) வா.சா.ஆ.6, 7 ஆவணங்கள் எனது அத்தை பாப்பா புதுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.118/2008 தாக்கல் செய்த ஆவணம் மற்றும் அந்த வழக்கில் ஏற்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையும் வா.சா.ஆ.6,7 ஆவணங்கள் என்றால் சரிதான்.

11) எனது அத்தை பாப்பா தாக்கல் செய்த வழக்கில் எனது அப்பா மற்றும் எனது பெரியப்பா, எனது பாட்டி ஆகியோர்களை தரப்பினர்களா சேர்த்துவிட்டு, 5ம் பிரதிவாதி சுப்புலெட்சுமியை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

12) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.19 ஆவணம் அறிவிப்பிலும் 5ம் பிரதிவாதி சுப்புலெட்சுமியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கான விபரம் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது.

13) மேற்கண்ட வழக்குகளில் 5ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்காமல், இந்த வழக்கில் மட்டும் ஏன் 5ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் எனது பெரியம்மா உமாவும், அண்ணன் பிரசாத்தும் சேர்ந்துதான் எங்களுக்கு தெரியாமல் விற்க முயன்றார்கள்.

14) 5ம் பிரதிவாதியை நாங்கள் தான் அறிவிப்பு அனுப்பி அவர்களுக்கு சொத்து கிடைக்க வேண்டும் என்று இந்தவழக்கில் தரப்பினராக சேர்த்தோம். அவருக்கு வழக்கறிஞரும் நாங்கள் தான் வைத்து கொடுத்துள்ளோம். அந்த வழக்கறிஞர் பெயர் எனக்கு தெரியாது.

15) என அப்பாவிற்கும், எனது பெரியப்பாவிற்கும் சொத்து பிரிக்கப்பட்டு, எனது அப்பா அவருக்கான சொத்தை விற்றுவிட்டார் என்றாலும், அவ்வாறு விற்ற பிறகு பாகம் கோருவது சரியல்ல என்றால் அப்பா எதையும் விற்கவில்லை. அவ்வாறு விற்றிருந்தால் அதுபற்றி எனக்கு தெரியாது.

16) எனது அப்பா 2002ம் ஆண்டிற்கு பின், வாய்மொழியாகவும், எழுத்து மூலுமாகவும் சொத்து பிரிப்பதற்கு பின் வேலைக்கு செல்லாமல் வெளியில் வாங்கிய கடனை அடைக்க முடியாததால், என் தாத்தா பெயரில் உள்ள சொத்தை என் அப்பா விற்று அந்த கடனை அடைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆவண எண்.487/2003 பாலகிருஷ்ணன் அவர்களுக்கு எனது தாத்தா, என் அப்பா வாங்கிய கடனுக்காக மேற்கண்ட சொத்தை விற்றார் என்றாலும், அந்த ஆவணத்தில் எனது அப்பாவும், எனது பெரியப்பா மூர்த்தியும் சாட்சி கையெழுத்திட்டுள்ளர்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா விற்றார் என்றால் சரியல்ல. எனது தாத்தா குப்புசாமிதான் விற்றார். அதில் எனதுஅப்பா சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் தெரியவில்லை. மேற்படி சொத்தை ஏன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் எங்களுக்கு சொல்வதற்கு யாரும் இல்லை. 'அ' பதிவேடு மூலம் எனது தாத்தா பெயரில் மாறியுள்ள சொத்தை மட்டும் வழக்கில் தாக்கல் செய்தோம். அனைத்து விபரங்களும் எங்களுக்கும், எனது அப்பாவிற்கும் தெரியும் என்றாலும், அதை என் அப்பா விற்றதால் நாங்கள் நீதிமன்றத்தில் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல.

17ஆவண எண். 633/2005, சர்வே எண். 118/9, வழக்கில் கண்ட சி ஷெட்யூல் சொத்தை எனது அப்பாதான் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்து வழக்கில் கண்ட சி ஷெட்யூல் சொத்து என்றால் எனக்கு தெரியும். என் அப்பா விற்றது எனக்கு தெரியாது.

18) வா.சா.ஆ.23, 24 ஆவணங்களில் கண்ட சர்வே எண். (1) 364/2, (2) 363/1 B ஷெட்யூலில் உள்ளஉள்ள சொத்துக்கள், மூர்த்தியால் கிரையம் வாங்ககப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

19) வா.சா.ஆ. 20ல் சர்வே எண்.365/3, 374/2A ன் படி 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மேற்படி இரண்டு சொத்துக்களை வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்தும் வழக்கு தாக்கல் செய்யும்போது இந்தியன் வங்கி, புதுநகர் கிளையில் அடமானத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். தற்போது திருப்பிவிட்டார்களா என்று எனக்கு தெரியாது.

20) B ஷெட்யூல் சொத்து 117/14 , 117/15 C ஷெட்யூல் 118/5, 118/6, 118/7 சொத்துக்கள் அனைத்தும் மூர்த்தியால் விற்கப்பட்டது என்று வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி சொத்துக்களை மூர்த்தி விற்கவில்லை என்றாலும், விற்ற பணத்தை வைத்து எனது அப்பாவின் கடனை எனது பெரியப்பா மூர்த்தி அடைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்களில் உள்ள நிலம் 1 ஏக்கர் 5 செண்ட் என்றாலும், இவைகள் புஞ்சை என்பதால் விவசாயத்திற்கு ஒத்து வராது என்பதால் எனது பெரியப்பா விற்று எனது அப்பாவின் கடனை அடைத்தார் என்றால் சரியல்ல. இதனால் தான் எனது பெரியம்மாவிற்கும், அவரது பிள்ளைகளுக்கும் குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

21) பானுமதி என்பவரிடம் வாங்கிய கடனுக்கு மட்டும்தான் மூர்த்தி சொத்தை அடமானம் வைத்து, பின்பு மீட்டுள்ளார் என்றால் சரியல்ல. வா.வா.ஆ.9 ஆவணம் மூலம் மூர்த்தி கடன் பெற்றுள்ளார் என்றாலும், அதன் ஆவணத்திற்கு பிறகு மேற்படி கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் சரிதான்.

22) செந்தில்குமார் தாயார் ராதா, சகோதரி பாப்பா, மூர்த்தியின் துணையோடு ஆவண எண்.2447/2013, 13.10.2013, புல எண். 365/4 1 ஏக்கர் 20 செண்ட் , அதே ஆவணத்தில் 365/3, 33 செண்ட், 1 ஏக்கர் 53 செண்ட் சொத்துக்களை எனது அத்தை பாப்பா வழக்கு தாக்கல் செய்து சமாதானம் ஆன பிறகு அவர்களை சேர்த்து வைத்து எனது அப்பா மேற்படி சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் சரியல்ல. இதில் பாப்பாவிற்காக நாங்கள் ஒரு ரூபாய் கூட பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

23) வா.சா.ஆ.34 ஆவணத்தில் மீனாட்சிக்கு, 2ம் பிரதிவாதி பிரசாத் சொத்தை விற்றதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதற்கு விற்றார் என்று எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை விற்றுதான் பாப்பாவிற்கு மனிதாபிமான அடிப்படையில் 2ம் பிரதிவாதி பிரசாத் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

24) எங்களுக்குள் ஏற்பட்ட சமாதானத்தின்படி ஆவண எண். 2447/2013 எனது தாத்தா குப்புசாமி பெயரில் இருந்தால் அனைவரும் கையெழுத்து போட்டால் தான் அதை விற்க முடியும் என்ற காரணத்திற்காக விற்ற பணத்தை எனது தகப்பனார் எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அதனால்தான் எனது அப்பா விற்ற ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

25) ஆவண எண். 2447/2013 ற்கான ஆவணத்தை அடுத்த வாய்தாவில் நான் தாக்கல் செய்கிறேன்.

26) எனது தாத்தா உயிரோடு இருக்கும்போது அவருடன் எங்களுக்கு பேச்சு வார்த்தை இல்லை. ஏனென்றால் எங்களுக்கு தாத்தாவை பிடிக்காது. ஆனால் ஒரு

குடும்பமாகத்தான் இருந்தோம். விவசாயமும் ஒன்றாகத்தான் செய்து வந்தோம். எனது தாத்தா, பெரியப்பா, எனது அப்பா மூன்று பேரும் சேர்ந்து குடித்துவிட்டு, தகராறு செய்வார்கள். எனது தாத்தா எனது அம்மாவை அசிங்கமாக பேசுவார் அதனால் எங்களுக்கு பிடிக்காது. நான் சொல்வது பொய் என்றாலும், எனது தாத்தா பெயரில் தான் சொத்து உள்ளது. அதில் பங்கு கேட்டுத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

27) எனது அம்மா, எனது தாத்தாவை செருப்பால் அடித்ததால்தான், எனது தாத்தாவிற்கு எங்கள் மேல் உள்ள பிரியம் விட்டுபோய்விட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. என் அம்மாவைதான் அவர்கள் அடித்துவிட்டு, எங்களை துரத்திவிட்டுவிடுவார்கள். நாங்கள் போய் குளத்தூர் நாயக்கர்பட்டி பேருந்து நிறுத்ததில் இரவில் தூங்காமல் உட்கார்ந்து இருப்போம்.

28) எனது அம்மாவும், அப்பாவும் விரும்பி காதல் திருமணம் செய்துகொண்டார்கள். அதனால் எனது தாத்தா எனது அப்பாவிற்கும், எனது அம்மாமவிற்கும் தனிப்பட்ட முறையில் ஊரார்கள் முன்னிலையில் திருமணம் செய்து வைக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அம்மா சொல்லியுள்ளார்கள். எனது அம்மா எனது தாத்தாவை மதிப்பதே இல்லை என்றால் சரியல்ல.

29) 2002ம் வருடம் பங்கு பிரித்த பிறகு எனது அப்பாவும், பெரியப்பாவும் தனித்தனியாக விவசாயம் பார்த்தார்கள் என்றாலும், பங்கு பிரிப்பதற்கு முன்னரும் தனித்தனியாகத்தான் விவசாயம் பார்த்தார்கள் என்றால் இல்லை. ஒன்றாகத்தான் இருந்தது. எனது அப்பாவின் வயலும், பெரியப்பாவின் வயலும் ஒரு இடத்தில்தான் இருந்தது என்றாலும், பம்ப்செட் இருவருக்கும் பொதுவாகத்தான் இருந்தது என்றாலும் சரிதான். போர்வெல் அமைப்பதாக இருந்தால், அப்பாவும், பெரியப்பாவும் சேர்ந்து வங்கியில் கடன் வாங்கியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது பெரியப்பா பெயரில் இந்தியன் வங்கியில் லோன் வாங்க முடியவில்லை என்பதால் என் அம்மாவின் பெயரில் லோன் வாங்கவில்லை. இது எனது அம்மா சொல்லித்தான் தெரியும். எனது அப்பா பெயரிலும், பெரியப்பா பெயரிலும் லோன் வாங்கியதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

30) எனது பெரியப்பா மூர்த்தி விபத்தில் இறந்துவிட்டார். அதன் பிறகு பொதுவான வீட்டில்தான் வசித்து வந்தோம். என் தங்கை பேசுவார். நான் பேசமாட்டேன். 2009ம் வருடமே மூர்த்தி என் அப்பாவுடன் சேர்ந்து சொத்தை விற்றுவருவதால், 1, 2 பிரதிவாதிகள் மற்றும் 2ம் பிரதிவாதியின் தங்கை தஞ்சாவூரில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் ஆமாம்.

31) எனது பெரியப்பா தஞ்சாவூரில் தங்கியிருந்த சமயத்தில் திருவையாறுக்கு திதி கொடுக்க சென்று வந்தபோது, விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

32) 2015ல் எனது பெரியப்பா இறந்த பின்னர், எனது அப்பாவும், எனது அம்மாவும் சேர்ந்துகொண்டு பம்ப்செட்டிற்கும், பாதைக்கும் பெரியப்பா இருக்கும்போது பேசியதை வைத்து 2016ம் வருடத்திற்கு அதற்கான பணத்தை வாங்கி கொண்டோம் என்றாலும், அதில் எனதுஅம்மாவும், எனது அப்பாவும் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

33) எனது அப்பா, எனது பெரியப்பா இறந்த பின்னர், இருப்பவர்களுக்கு எதுவும் தெரியாது என்று எண்ணி, உண்மையை மறைத்து எங்களுக்கு விபரமே தெரியாமல், எனது அப்பா விற்றதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

34) எனது பெரியப்பாவிற்கு தாத்தா திருமணம் வைத்தார் என்றாலும், எனது அப்பாவிற்கு திருமணம் செய்து வைக்கவில்லை என்பதால் அதற்கான செலவிற்கான தொகையாக கருதி கூடுதலாக 3/4 ஏக்கர் நிலம் கூடுதலாக எனது அப்பாவின் பாகத்தில் பெற்றுள்ளோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

35) தற்போது நான், எனது தங்கை, எனது அம்மா மூவரும் தஞ்சாவூர் இந்திரா நகர், நாஞ்சிக்கோட்டை ரோட்டில் குடியிருந்து வருகிறோம். எனது அப்பா எங்களுடன்தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. எங்களது உறவினர் வீட்டு விசேஷத்தில் எனது அப்பாவுடன் கலந்து கொண்ட புகைப்பட நகல்கள் எங்களிடம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உறிவினர் எனது அப்பாவிற்கும் சொந்தம், எங்களுக்கும் சொந்தம் என்பதால் போட்டோவில் இருப்பார். ஒரே போட்டோவில் வெவ்வேறு பக்கமாக இருப்போம்.

36) நான் முன்னர் சென்னையில் வேலை பார்க்கும்போது, எனது தந்தை மலேசியாவிலிருந்து வந்து அங்கு எங்களுடன் தங்கி ஒன்றாகத்தான் வேலை செய்து வந்தோம் என்றால் இல்லை. நான் தற்போது திருப்பூரில் வேலை செய்து வருகிறேன்.

37) A ஜெட்யூல் சொத்தில் 5வது அயிட்ட சொத்து 365/4 1.55 ஏக்கர் நிலத்தை மீனாட்சி என்பவருக்கு எனது அப்பா விற்றுள்ளார் என்றால் இல்லை.

38) B ஜெட்யூல் 6வது அயிட்ட சொத்தில் 365/3 1.10 ஏக்கரை 1ம் பிரதிவாதிக்கு எனது அப்பா விற்றுள்ளார் என்றால் எனது பெரியம்மாவும் சேர்ந்துதான் விற்றார். மறு பகுதியை மீனாட்சிக்கு விற்றுள்ளார் என்றால் அது தெரியாது.

39) C ஜெட்யூல் சொத்து 5வது அயிட்ட சொத்து 365/4, 7 வது அயிட்ட 373/2 என் அப்பா வசம்தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அது குப்புசாமி பெயரில் இருந்ததால் என் அப்பாவால் விற்க முடியவில்லை என்றால் இல்லை. நான் சொத்துவிபரத்தில் சொல்லியுள்ள சொத்துக்கள் அனைத்தும் உண்மை இல்லை, முன்னுக்கு பின் முரணானது என்றால் சரியல்ல.

40) மேலும் என்னால் மேலே கூறப்பட்ட ஆவணத்தை 30 நாட்களுக்கு பிறகு தாக்கல் செய்கிறேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.